**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2021**

**.................................................................**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**.................................**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**.................................................**

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**....................................................................**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

**.............................................................................................................................................**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

............................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி இருப்புக்களின் பெறுமதி கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி அகிய பெறுமதிகளில் மிகவும் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் நிகர தேறக்கூடிய பெறுமதியை கவனித்துப் பார்க்காது ரூபா 6,744,735 புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியம இலக்கம் 09 இற்கு இணங்க இருப்புக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட பாதகமான சூழ்நிலையின் காரணமாக அந்த திட்டமிடப்பட்ட செயற்பாட்டினை நிறைவேற்ற முடியாதிருந்தது. எனவே கணக்கு கூற்றுக்களில் இருப்பு பெறுமதியை | நியமத்தின் பிரகாரம் இருப்புக்களின் பெறுமதியை கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நியமங்களுக்கு இணங்க காட்டுவதற்கு 2022 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 431.78 ஹெக்டேயர் காணியின் பெயரளவுப் பெறுமதியாக ரூபா 4,237,430 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அக்காணியை மீள்மதிப்புச் செய்த அவற்றின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களை மீளமதிப்புச் செய்தலினை அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் நிறைவேற்ற முடியாதிருந்ததனால் தகமைபெற்ற ஒரு மதிப்பீட்டாளரின் வாயிலாக மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 431.78 ஹெக்டயர் காணி தொடர்பான மதிப்பீட்டு பெறுமதியையும் உள்ளடக்கி நிறுவனத்தின் முழுக் காணியினதும் கட்டிடத்தினதும் மீள்மதிப்புச் செய்யப்பட்ட பெறுமதியை 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் பெறுமதியை மீள்மதிப்புச் செய்து அவற்றின் நியாயப் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றில் இருப்பு பெறுமதியினுள் பயன்படுத்தப்படாத இருப்பு ரூபா 489,000 தொகையும் அசைவற்ற இருப்பு ரூபா 434,249 தொகையுமாக காட்டப்பட்டிருந்தும் அந்த இருப்புக்களுக்குரிய பட்டோலைகளில் பெறுமதி முறையே ரூபா 1,512,680 மற்றும் | 2021 நிதிக்கூற்றுக்களில் இருப்புக்களின் பெறுமதியின் கீழ் விளைவற்ற இருப்பாக ரூபா 489,000 மீதியும் அசைவற்ற இருப்பாக ரூபா 434,249 மீதியும் 2016 கணக்காண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந் தது. எவ்வாறாயினும் இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா | நிதி நிலைமைக் கூற்றில் சரியான பெறுமதி உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 752,000 ஆக இருந்ததனால் முறையே ரூபா 1,023,680 மற்றும் ரூபா 317,751 இனால் இருப்புக்களின் பெறுமதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 9,213,691 ஆக இருந்ததுடன் 2021-12-31 இல் உள்ளவாறு அதில் இனங்காணப்பட்ட விளைவற்ற இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,512,680 ஆகவும் அசைவற்ற இருப்புக்களின் பெறுமதி ரூபா 752,000 ஆகவும் இருந்த உரிய சரி செய்தல்கள் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் பெறவேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,214,500 தொகை 2011 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான 11 ஆண்டுகள் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முறையான தகவல்கள் ஏடுகளில் இல்லாததனால் இதனை பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள துடன் 2012-09-26 ஆந் திகதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதற்காக இதுவரை பதில் கிடைத்திருக்காததனால் இது தொடர்பாக மீண்டும் அமைச்சிற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமானங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் | கல்விச் செயற்பாடுகளுக்காக | கல்விச் செயற்பாடுகளுக்காக | தாபன விதிக் கோவையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவு | சம்பளத்துடன் விடுமுறையை பெற்று வெளிநாடு சென்ற பிணைமுறி நிபந்தனையை மீறிய 04 உத்தியோகத்தர்கக ளிடமிருந்து 04 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகள் வரையான காலத்தில் சபையினால் அறவிட வேண்டிய மீதிகளின் மொத்தம் ரூபா 3,509,706 சம்பந்தமாக அந்த புலமைப்பரிசிலாளர்க ளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கா ததுடன் உரிய கோவைகள் காணாமல் ஆக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டு ள்ளது. | சம்பளத்துடன் விடுமுறையைப் பெற்று பிணை முறி நிபந்தனைகளை மீறிய 04 உத்தியோகத்தர்களுக் குரிய கேவைகள் காணாமலாக்கப்பட்டிரு க்காததுடன் மூன்று உத்தியோகத்தர்களிட மிருந்து நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு உத்தியோகத்தர் முழுப்பணத்தையும் செலுத்தி பூர்த்தி செய்துள்ளார். | ஒழுங்கு விதிகளுக்கு இணங்க வெளிநாடு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர் களிடமிருந்து உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | ரூபா 4,300,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 06 வாகனங்கள் பயன்படுத்துவதிலிரு ந்து நீக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கும் 09 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தும் அந்த வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிறுவனத்தின் பழைய 06 வாகனங்களை நீக்குவதற்காக இனங்காணப்பட்டுள்ள துடன் அந்த வாகனங்களை 2/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்வதற்காக 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக கைதவிர்ப்பு நடவடிக்கை தாமதமடைந்துள்ள து. எவ்வாறாயினும் | சுற்றறிக்கையிலு ள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க தாமதமின்றி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத வாகனங்களை கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். |

தற்பொழுது அந்த வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்காக விலை மனுக்களை கோருவதற்கான அங்கீகாரம் அமைச்சின் மூலம் வேண்டப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,873,555 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 10,850,732 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 5,022,823 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தின் மானியம் மற்றும் தோட்டங்களின் வருமானம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| விடயம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | வித்தியாசம் | வித்தியாசத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| அரசாங்க மானியம் | 423,490,000 | 414,000,000 | 9,490,000 | 2 |
| ஏனைய வருமானம் | 10,657,312 | 10,927,301 | (269,989) | (2) |
| பிற்போட்ட வருமானம் | 139,733,221 | 143,037,426 | (3,304,205) | (2) |
| தோட்ட வருமானங்கள் | 118,624,133 | 94,848,165 | 23,775,968 | 25 |
| சம்பளம், கூலி மற்றும் ஊழியர் பிரதிபலன்கள் | 377,217,587 | 315,631,115 | 61,586,472 | 19 |
| வழங்கள் மற்றும் பயன்பாட்டுச் செலவுகள் | 24,033,699 | 8,038,748 | 15,994,951 | 199 |
| பராமரிப்புச் செலவுகள் | 49,633,350 | 25,507,224 | 24,126,126 | 94 |
| பெறுமானத் தேய்வு மற்றும் காலக்கழிவு செலவுகள் | 111,860,976 | 96,874,142 | 14,986,834 | 15 |
| ஏனைய செலவுகள் | 113,496,929 | 205,869,599 | 92,372,670 | 45 |

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முறையே 5.3:1 மற்றும் 4.9:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அப்பெறுமதிகள் முறையே 3:1 மற்றும் 2.7:1 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செய்றதிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட 466 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 14,044,349 மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மொத்த பணத்திற்காகவும் அறவிடமுடியாக் கடனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கடன்பட்டோர் மீதிகள் அறவிட முடியாத நிலையில் காணப்பட்டதனால் அம்மீதிகளைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021-12-31 ஆந் திகதியில் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி ரூபா 14,407,500 இல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 14,044,349 ஆகும். அக்கடன்பட்டோரில் ரூபா 2,599,565 பணத்தை செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதியான 197 கடன்பட்டோர்களின் கடன்பட்டோர் பணத்திற்காக தேவையான செம்மையாக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியதுடன் செம்மையாக்குவதற்காக முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பித்து அந்த 02 ஆண்டுகளுக்குள்ளேயே முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 11,188,313 மொத்த பெறுமதியான அலுவலக கட்டிடத்தை அமைத்தல், உத்தியோகபூர்வ இல்லத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய 04 நிர்மாணங்களை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட திருத்தம் செய்தல் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில் 4 ஒப்பந்தங்களை 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. இந்த வேலைகளை பூர்த்திசெய்வதற்கு தாமதித்தமைக்கான பிரதான காரணமானது நாட்டில் காணப்பட்ட | நர்மாண நடவடிக்கைகளை தாமதமின்றி பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொவிட் தொற்றுநோய் நிலைமையும் காணப்பட்ட பணவீக்க சந்தையின் அடிப்படையில் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையினாலாகும். எனவே இந்த ஒப்பந்தங்களை எதிர்காலத்தில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டின் மார்ச் மாதத்தில் சிலிகா ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக நியூசிலாந்து பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 1,081,074 தொகை சபைக்கு கிடைத்திருந்ததுடன் 2022 யூலை 31 ஆந் திகதி வரை அப்பணம் உரிய செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் சிலிக்கா ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக நியூசிலாந்து கல்கலைக்கழகத்திடமிருந் து இப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட து. இப்பணத்தை பயன்படுத்தி தற்பொழுது ரூபா 466,250 தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தை பயன்படுத்தி செய்றதிட்டத்திற்குரிய செலவுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததன் பின்னர் மிகுதியை வருமானத்திற்குச் செலவு வைத்து 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்திற்காக கிடைத்த பணத்தை உரிய செயற்திட்டத்தின் செயலாற்றல் மட்டத்தை அதிகரிப்பதற்கு பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் 2016 பெப்வரி மாதத்தில் மருத்துவ உதவி நிதியமான ரூபா 5,000,000 தொகை இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. இந்த வைப்பினை பேணுவதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தது டன் எதுவித மருத்துவ உதவிப் | நிறுவனத்தின் ஊழியர்களுக்கு மருத்துவ உதவி பிரதிபலன்களை வழங்குவதற்காக நிதியத்தினை தோற்றுவிப்பதற்கு இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் திருத்திய 1961 அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் இலக்கத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் 2016 ஆம் | பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதியத்தினை அமுல்ப்படுத்தும் மட்டத்தில் பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணமும் இதுவரை செலுத்தப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கு மீதி ரூபா 6219,318 ஆகக் காணப்பட்டது. | ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 5,000,000 வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. அதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் சிபாரிசுகள் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட மின்சார வயர் முறைமை திருத்தம் செய்வதற்காக ரூபா 143,934 தொகைக்கு 10 மின் கம்பங்களும் 2019 ஆம் ஆண்டின் போது கணக்குப் பிரிவின் ஆவணக் காப்பகத்தினை திருத்தம் செய்வதற்காக ரூபா 83,536 தொகைக்கு 20 Dura Panel Board களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 2022 யூலை 31 ஆந் திகதி வரை அந்த உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் காணப்பட்ட மின்சார வயர் முறைமையை திருத்தம் செய்வதற்காக இந்த மின் கம்பங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அந்நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடு 2022 ஆம் ஆண்டில் இல்லாததனால் எதிர்காலத்தில் உரிய திருத்தம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வதிவிட பொறியியலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கணக்குப் பிரிவின் ஆவணக் காப்பகத்தினை தயார்படுத்துவதற்காக வேலைப் பிரிவினால் சரியான ஆய்வினை மேற்கொள்ளாது 10 Dura Panel கள் கட்டளையிடப்பட்டு கொள்வனவு செய்வதற்கு | பெறுகைக்கு முன்னைய செயற்பாடுகளை முறையாக அமுல்படுத்த வேண்டியதுடன் சொத்துக்களைப் பயன்படுத்துவதனை முறைப்படியாக செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பின்னர் அவை உரிய செயற்பாட்டிற்குப் பொருத்தமற்றது என இனங்காணப்பட்டதனால் அதனை ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு வேலைப் பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டது. | |
| (ஊ) | சபையின் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 1,119,838 மொத்தப் பெறுமதியான 05 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாத 228 பொருள் விடய்ங்கள் மீளாய்வாண்டு வரை கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021-12-31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதவகையில் களஞ்சியத்தில் காணப்பட்ட அழிவடைந்த மற்றும் பயன்படுத்தப்படாத பொருட்களின் பட்டியல் அனைத்து திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள துடன் அவர்களின் தேவைப்பாட்டிற்கு இணங்க வேண்டப்படுகின்ற பொருட்களாக இருந்தால் அவற்றினை ஒவ்வொரு திணைக்களத்திற்கும் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கியதன் பின்னர் மிகுதியாகவுள்ள பொருட்களை விலைமனுக் கோரி விற்பனை செய்வதற்கு தேவையான பெறுகை நடவடிக்கை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சபையின் பயன்படுத்தப்படாத பொருட்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கைதவிர்ப்புச் செய்தல் நடவடிக்கைகளையும் துரிதப்படுத்துதல் வேண்டும். |

**3.2 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**.......................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | .................................................. | ............................. | ............... |
| (அ) | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி | இப்பதவி 2018 திசெம்பர் | சபையின் பிரதான |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் பணிப்பாளர் பதவி 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 யூலை 31 ஆந் திகதி வரை 05 ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவிக்கு ஒரு உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அப்பதவி ஒரு நிரந்தர பதவி என்பதனால் துரிதமாக அப்பதவிக்கு ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும் மேலதிகப் பணிப்பாளர் அப்பதவியின் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளார். | மாதம் வெற்றிடமாக இருந்தது. அதற்காக 2019 சனவரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போதிலும் அதன் பெறுபேறு அமைச்சினால் வழங்கப்படவில்லை. பின்னர் 2021 ஆம் ஆண்டு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. எனினும் அமைச்சு அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக உரிய நேர்முகப் பரீட்சையினை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. | நிரந்தரப் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் பிரதிப் பாணிப்பாளர் நிருவாகம் பதவி 2017 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடத்தினை நிரப்புவதற்காக 2021 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தொடக்க தகமைகளை நிறைவேற்றியுள்ள விண்ணப்பதாரர்கள் இருவர் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்ரைசயின் இறுதி சிபார்சும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அப்பதவிக்கு ஒரு உத்தியோகத்தரினை சேர்த்துக் கொள்ளல் 05 ஆண்டுகள் காலம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக அகலவத்த தலைமை அலுவலகம், இரத்மலானை அலுவலகம், நிவிதிகல, குருவிட, மொனராகலை, பொலகஹவல ஆகிய உப நிலையங்களின் நிருவாக நடவடிக்கைகளையும் முறையான வகையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. | இந்த நிறுவனத்தில் அத்தியவசியமாக நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களை இனங்கண்டு அதற்கு தேவையான அங்னகீகாரத்தினை வழங்குதலினை கவனித்துப்பார்ப்பதற்காக 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அதன் போது இப்பதவியினை நிரப்புவது தொடர்பாக நேர்முகப் பரீட்சையினை பூர்த்திசெய்து உரிய சிபார்சு அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டது. உரிய ஆவணங்களுடன் மீண்டும் அங்கீகாரத்தினை வேண்டுமாறு அன்று எங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கிணங்க தற்பொழுது அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சபையின் அங்கீகரித்த பதவியணியினை திருத்தம் செய்வதற்கு அல்லது அத்தியவசியமான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையன் 59 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட | பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது |

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சிப் பிரிவிற்காக 10 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும், 13 சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் 14 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுமாக 37 நபர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. அதற்கிணங்க ஆராய்ச்சிப் பிரிவில் மாத்திரம் 62 சதவீதமான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மிகவும் தாமதமான நிலையில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | பதவிக்காக உள்ளக ரீதியாக விண்ணப்பங்களைக் கோருவதற்கு அங்கீகாரத்தினை வழங்குமாறு அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பதவி வெற்றிடங்களை நிரப்பும் அதிக தேவைப்பாடு விளக்கமளிக்கப்பட்டு அந்த வேண்டுதல் அமைச்சிற்கு தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்புவதற்கு தற்பொழுது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிட எண்ணிக்கையையும் சேர்த்துக்கொள்வதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரிய எழுத்துமூல பரீட்சையினை நடாத்துவதற்கு விசேட அனுமதியை வழங்குமாறு விடயத்தினை தெளிவுபடுத்தி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சேவை தேவைப்பாட்டினை மீண்டும் கவனித்தப் பார்த்து அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |